DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். STC.884/2022

**prosecution witness: PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விக்ரம் | தொழில் | : | தங்கும்விடுதி |
| த/பெ. | : | ராஜகோபால் | வயது | : | 45 |
| ஊர் | : | மாடசாமிகோவில் தெரு, இராமேஸ்வரம் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

__27.11.2025__

( 2ம் எதிரி ஆஜர், 3ம் எதிரி மனுவின்பேரி ஆஜரில்லை. 1 மற்றும் 4ம் எதிரிகள் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

__முதல் விசாரணை:-__

1) நான் தற்போது மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து வருகிறேன். 14.10.2019ம் தேதி காலை 11.00 மணியளவில் திட்டக்குடி தெருவில் ஒரு வேலையாக வந்தேன். அதை முடித்துவிட்டு வீடு திரும்பும்போது மேலவாசல் அருகே ஓட்டல் ஆரியாஸ் ல் தண்ணீர் குடிக்க 1 லிட் பிஸ்லரி வாட்டர் கேன் வாங்கிவிட்டு காசு கொடுத்துவிட்டு பில்லைப் பெற்று பார்த்தபோது அந்த தண்ணீரில் எட்டுக்கால் பூச்சி இருந்தது. மேற்சொன்ன பாட்டிலை திறப்பதற்கு முன்பாகவே எட்டுக்கால் பூச்சி இருப்பதை பார்த்துவிட்டேன். அதன் பின்னர் கடைக்காரரிடம் சத்தம்போட்டுவிட்டு அந்த கேனை உடைக்காமல் அந்த கேனை வீட்டிற்கு கொண்டு வந்துவிட்டேன். அன்றைய தினம் மாலை 8.00 மணியளவில் நான் போய் லாயரை பார்த்து விபரத்தை சொன்னேன். அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாக கூறினார். 09.11.2019 அன்றைய தினம் நோட்டீஸ் அனுப்பினோம். அது சம்பந்தமாக வக்கீலிடம் கேட்கும்போது நோட்டீஸ் போகட்டும் பதில் வரட்டும் என்று கூறினார். 26.11.2019 அன்று பிஸ்லரி வாட்டர் கம்பெனியில் இருந்து பதில் வந்தது. அது ஒரு பொய்யான நோட்டீஸ் ஆக இருந்தது. அதனால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. **(என்னிடம் காட்டப்படும் 14.10.2019 தேதியிட்ட ஓட்டல் ஆரியாஸின் ரூ.20 க்கான தண்ணீர் பாட்டில் வாங்கியதற்கான ரசீது எண் 11-ன் நகல் நான் வாங்கியது அது ம.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்சொன்ன ரசீதின் அசலில் வார்த்தைகள் அழிந்துவிட்ட காரணத்தினால் நகலாக

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது. (**09.11.2019 ம் தேதியிட்ட வழக்கறிஞரால் 1 முதல் 3 எதிரிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் ம.சா.ஆ.2 ஆகவும், அதனுடைய அஞ்சல ரசீது 3 எண்ணிக்கை ம.சா.ஆ.3 ஆகவும், 2 மற்றும் 3 ம் எதிரிகள் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை 2 எண்ணிக்கை ம.சா.ஆ.4 ஆகவும், 26.11.2019 தேதியிட்டு 1 ம் எதிரியால் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

<u>எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) 4 வது எதிரி நடத்திய கடையில்தான் மேற்படி தண்ணீர் பாட்டிலை நான் பெற்றதாக நான் தாக்கல் செய்த புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பில்லின் அசலில் கடையின் பெயர் மற்றும் எந்த விபரமும் இடம்பெறவில்லை என்றால் சரிதான். அசலுடன் ஒப்பீடு செய்யப்பதன் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வேண்டுமென்றே விபரங்கள் அழிந்துவிடும் என்று தெரிந்தே காலதாமதமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 ல் 3 ம் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. நான் பாட்டிலை வாங்கியவுடன் நான் யாருக்கும் உடனடியாக அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான் 20 நாட்கள் கழித்துத்தான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான்.

2) நான் பாட்டிலை வாங்கியவுடன் உணவு பகுப்பாய்வு அதிகாரியின் ஆய்விற்கு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். இது சம்பந்தமாக உணவுப்பாதுகாப்பு அதிகாரிக்கு புகார் ஏதும் நான் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு இந்த எதிரிகள் மீது தனிவழக்கு தாக்கல் செய்வதற்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் 16.06.2022 ம் தேதி அன்று நான் மேற்படி பாட்டிலை பாளையம்கோட்டை உணவு பகுப்பாய்வு அலுவலகத்திற்கு பணம் செலுத்தி பகுப்பாய்வுக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். (**என்னிடம் காட்டப்படும் 27.04.2022 ம் தேதியிட்ட இராமேஸ்வரம் இந்தியன் வங்கி கிளையின் வரைவுக் காசோலைகள் அசல் 2 எண்ணிக்கைகள் அதன் எண்கள் 979054 மற்றும் 979055 ரூ.810/- மற்றும் ரூ.4500/- ஆகியவை என்னால் நீதிமன்றத்தில் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அவை முறையே எ.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3) **என்னிடம் காட்டப்படும் உணவுப்பாதுகாப்பு மற்றும் மருத்துவ நிர்வாகத்துறை, பாளையம்கோட்டை உணவு பகுப்பாய்வாளர் அவர்களால் ந.க.எண்.1446/அ1/2022 தேதி 20.06.2022 என்பது நீதிமன்றம் மூலமாக அனுப்பப்பட்ட பில்லரி தண்ணீர் மாதிரி காலாவதியானதால் உணவுப்பாதுகாப்பு தர நிர்ணய விதிகளின்படி பகுப்பாய்விற்கு உட்படுத்த இயலாது என்று**

**இந்நீதிமன்றத்திற்கு திரும்ப அனுப்பப்பட்ட கடிதம் என்றால் சரிதான். அது எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4) எனவே உணவுப்பகுப்பாய்வாளர் கலப்படம் உள்ளதாக சான்று அளிக்காத நிலையில் என்னால் இந்த வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. கண்ணில் பார்க்கும்போதே எட்டுக்கால் பூச்சி தெரிகிறது. உணவுப் பாதுகாப்பு ஆணையரால் சாங்சன் வழங்கினால்தான் குற்ற வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்றால் சரியல்ல. நான் சட்டவிதிகள் எதையும் கடைபிடிக்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. நான் காலம் கடந்த இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றால் சரியல்ல.

SUJITH

Digitally signed by SUJITH
Date: 2025.11.27 11:15:46 +0530